



- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**70**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# காற்றில் பறந்த கருஞ்சாம்பல்!

ஓவியம் : ரவி பேலட்



*1986-ஆம் ஆண்டு டிசம்பர் 22-இல் தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம், கழகத்தைச் சேர்ந்த 10 சட்டமன்ற உறுப்பினர்கள், அவையின் உறுப்பினர்களாகத் தொடரத் தகுதியற்றவர்கள் என்றும், அவர்கள் அவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார்கள் (Expelled) என்றும், அவர்கள் அவையின் உறுப்பினர்களாகத் தொடர்ந்து நீடிக்க முடியாது என்றும் தெரிவித்தது. அவர்களின் இடங்கள் காலியாகிவிட்டன (Vacant) என்றும் அந்தத் தீர்மானத்தின்படி அறிவிக்கப்பட்டது.*

*அவைமுன்னவரால் கொண்டுவரப்பட்ட ஒரு முன்மொழிவின்மீது, சட்டமன்றத்தால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே தேதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதே தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் அசாதாரண வெளியீட்டில் (Government Gazette Extraordinary) வெளியிடப்பட்டது. குறிப்பாக, அந்த அரசாணையில், சட்டமன்ற உறுப்பினர்களை நீக்குவதற்காகக் கூறப்பட்ட கருத்துகள் இவைதான்..*

*1986-ஆம் ஆண்டு நவம்பர் 9 அன்று, கோவையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில், இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக இந்தி இருக்க வகை செய்யும் இந்திய அரசியலமைப்பின் பகுதி-XVII-ன் (PART 17) ஒரு பகுதியை, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 1986-ஆம் ஆண்டு நவம்பர் 17 அன்று தொடங்கி, 1986-ஆம் ஆண்டு டிசம்பர் 17 அன்று முடிவடையும் காலத்திற்குள் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் எரிக்க வேண்டும் என்று முடிவுசெய்தது. அதன்படி, அரசியலமைப்புச் சட்ட நகல் எரிப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று செய்தித்தாள்கள் மற்றும் பொதுக்கூட்டங்கள் மூலமாகப் பொதுமக்களுக்குத் தெரியப் படுத்தியது.*

*அந்தத் தீர்மானத்தின்படி, திராவிட முன்னேற்றக் கழக கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதியின் நகலை (அத்தகைய பகுதி எழுத்து வடிவிலோ, அச்சு வடிவிலோ அல்லது கண்ணுக்குத் தெரியும் வடிவிலான பிரதிநிதித்துவம் அல்லது மறுஉருவாக்கம் செய்யப்பட்ட வேறு எந்த முறையிலோ உள்ள பகுதிகளைக் கொண்ட ஆவணம் அல்லது காகிதம்) பொது இடத்தில் எரித்துள்ளனர். மேற்கூறிய தீர்மானத்தின்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பின்வரும் சட்டமன்ற உறுப்பினர்கள், அத்தகைய செயலில் ஈடுபட்டனர் என தேதிவாரியாகக் குறிப்பிட்டது.*

*1986-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதியில், க.அன்பழகன், எஸ்.பாலன், ஏ.செல்வராசன், பி.பொன்னுரங்கம், பரிதி இளம்வழுதி ஆகியோரும் நவம்பர் 19-ஆம் தேதி எம்.இராமநாதன், நவம்பர் 23-ஆம் தேதி ஆர்.சின்னசாமி, நவம்பர் 29-ஆம் தேதி எம்.ஆபிரகாம், சி.ஆறுமுகம், டிசம்பர் 5-ஆம் தேதி வி.கே.ராஜூ ஆகிய 10 உறுப்பினர்களும் இந்திய அரசியலமைப்பின் உறுதிமொழியை மீறும் செயலைச் செய்தனர். அரசியலமைப்பின் மீதான மதிப்பை, அதன்படி உருவாக்கப்பட்ட இந்த அவையின் மீதான மதிப்பை மற்றும் இந்த அவையின் ஒரு உறுப்பினர் கொண்டிருக்கவேண்டிய மதிப்பைக் குலைத்துள்ளனர். இது அரசியலமைப்பின் கண்ணியத்திற்கும், இந்த அவையின் கண்ணியத்திற்கும் இழிவை ஏற்படுத்துவதுடன், இந்த அவை தனது உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தர நிலைகளுக்கு முற்றிலும் முரணானதாகவும் உள்ளது. எனவே, மேற்சொன்ன நடத்தையின் காரணமாக, இந்த அவையின் மேற்சொன்ன உறுப்பினர்கள் இந்த அவையின் உறுப்பினர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்று, இந்த அவை கருதுகிறது” எனக் குறிப்பிட்டது.*

நம் இனமானப் பேராசிரியர் உட்பட கழகத்தின் 10 சட்டமன்ற உறுப்பினர்களை அவையிலிருந்து நீக்கிய விவகாரம், அன்று தேசிய முக்கியத்துவம் கொண்ட செய்தி. அது மட்டுமல்ல, அவர்கள் இந்தியை எதிர்த்து நடத்திய சட்ட நகல் எரிப்பு அடையாளப் போராட்டமும் தேசிய முக்கியத்துவம் கொண்ட செய்தியாகப் பரவியது. அதைவிடவும் முக்கியமாக, இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்கிற போரில், கழகத்தின் உறுதியை, கலைஞர் கட்டி எழுப்பியது, தேசிய முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது.

### அண்ணாவின் உரைகளோடு அறிக்கைகள்

இப்போது நுழைப்பதுபோல, அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அரசு, தேசியக் கல்விக் கொள்கை (NEP-1986) என்கிற பெயரில், நாடு முழுவதும் ‘நவோதயா வித்யாலயா’ (Navodaya Schools) பள்ளிகளைத் தொடங்கத் திட்டமிட்டது. இப்பள்ளிகளில் இந்தி கற்பிப்பது கட்டாயமாக்கப்படும் என்றும் அறிவித்து, மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியது. இதே காலகட்டத்தில், ஒன்றிய அரசின் சுற்றறிக்கை ஒன்று, தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ‘இந்தி வாரம்’ கொண்டாட்டத்தின்போது, ஒன்றிய அரசு அலுவலகங்களில் இந்தி மொழியை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், டெல்லியில் இருந்து வரும் அனைத்து கடிதங்களும் இந்தியிலேயே இருக்கும் என்றும், அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது போலவே, அப்போதைய ஆட்சியும் ஒன்றிய அரசுக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்த நிலையில், தன்னெழுச்சியாகப் போராடிய மாணவர்கள் தடியடிக்கு ஆளான நிலையில், அன்றைக்குப் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகக் களம் புகுந்தது கழகம். எதிர்க்கட்சியாக மட்டுமல்ல; தமிழ் மொழியைக் காக்க கழகமே என்றென்றைக்கும் முன் நிற்கும் என்கிற சான்றாகவும் கலைஞர் போராட்ட வியூகங்களை வகுத்தார்.

“உடன்பிறப்பே, காலை விட்டு ஆழம்பார்த்தும் - தலையை நீட்டியும், குட்டு விழுந்தவுடன் தலையை இழுத்துக்கொண்டு, தமிழகத்தில் என்றாவது ஒரு நாள், தனது ஆதிக்கத்தின் முரட்டுப் பாதங்களைப் பதித்துவிட வேண்டுமென்று பாரத மாதாவின்மீது சத்தியம் செய்துவிட்டு, பதுங்கிப் பயிலும் இந்தித் திணிப்பு மாய்மாலத்தில் அதிகாரச் சிலந்தி வலையில் சிக்க மாட்டோம் என்று முழங்கி உரைத்து, சுடர்முகம் தூக்கி இளைஞர், மாணவர், எழுந்துவிட்டனர் புயலாய்! சூறாவளியாய்! பூகம்பமாய்! ‘இந்தி வாரம் கொண்டாடுக’ என்ற ஆணைகள் தமிழகத்து வீதிகளில் காலில் மிதிபடுகின்றன! இந்தியை வலியுறுத்திப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஏழு அம்ச அறிக்கை, எரிநெருப்பில் தூக்கி எறியப்பட்டு, அதன் கருஞ்சாம்பல் காற்றில் பறக்கிறது!” என்று அறிக்கைகளோடு களம் இறங்கினார் கலைஞர்.

“நீ தமிழனாகவும் இருக்கலாம்; ஆனால், இரண்டாம் தரக் குடிமகனாகத்தான் இருக்க வேண்டும். அதற்கு ஒரே வழி இந்தியைத் தாங்கியிருப்பதுதான் என்றால் - நான் தமிழனாக மட்டும் இருந்துவிட்டுப்போகிறேன் போ! என்று கூறவேண்டிய, தவிர்க்க முடியாத கட்டாயத்துக்கு இன்று தமிழர்களைப் பிடித்துப் தள்ளுபவர்கள் யார்?

சிறிதும் ஒருமைப்பாடு காக்க வேண்டுமென்ற சிந்தனை இருக்குமேயானால் - வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என்ற நிலையை நீர்மேல் எழுத்தாக்க முனைவரோ மத்தியில் இருப்போர்?” என்று 1965-ஆம் ஆண்டு போராட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் உரைகளோடு போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தார் கலைஞர்.

கோவையில், இந்தி எதிர்ப்பு மாநில மாநாட்டினை நவம்பர் 8, 9, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடத்தப்போவதாக அறிவித்ததுடன், நவம்பர் 17-ஆம் தேதி, இந்தித் திணிப்பு சட்ட நகல் எரிப்புப் போராட்டத்துக்கும் தேதி குறித்தார்.

1963-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புச் சட்ட நகல் எரிப்பு அறப்போருக்கு, அண்ணா குறித்த அதே தேதியை 1986-ஆம் ஆண்டிலும் குறித்தார், அவரது தம்பி முத்தமிழறிஞர் கலைஞர்.

> **“1963-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புச் சட்ட நகல் எரிப்பு அறப்போருக்கு, அண்ணா குறித்த அதே தேதியை 1986-ஆம் ஆண்டிலும் குறித்தார், அவரது தம்பி முத்தமிழறிஞர் கலைஞர்.”**

...தொடரும்

## சபையில் எடுபடாத ‘சினிமா’ டயலாக்குகள்!

தமிழ்நாடு சட்டப்பேரவை மாண்பினையும் மரபினையும், மீறுவதையே வழக்கமாகக் கொண்டுள்ள த.வெ.க. அமைச்சர்களின் பேச்சுகள், தொடர்ச்சியாக அவைக்குறிப்பில் இருந்தே நீக்கப்படும் நிலை உள்ளது. ஒரே நாளில், மூன்று அமைச்சர்களின் பேச்சுகள் அடுத்தடுத்து, அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டிருப்பது, கேலிக்கூத்தாக மாறியுள்ளது.

சுகாதார மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில், வனத்துறை அமைச்சர் பேசுகிறார். அவர் பேச்சு, த.வெ.க.வினரின் அரசியல் தரத்தை வெளிச்சமிட்டுக் காட்டியது. நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரை, பேரவையின் எந்தவொரு அடிப்படை நாகரிகமும் இல்லாமல், ஒருமையில் விளித்துப் பேசியது, அவை மரபை மீறிய செயல் எனக் கண்டிக்கப்பட்டார். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் ஆவேசமான மற்றும் நியாயமான எதிர்ப்பிற்கு முன்னால் நிற்க முடியாமல், சபாநாயகர் அந்தப் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினார். அதுபோல, சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினால், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பதில் அளிக்கிறார்.

மேகமலை விவகாரம் தொடர்பாக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் பின்னணியைப் புரிந்துகொள்ளாமல், கழக ஆட்சிக்காலத்தின் இறுதி அறிக்கையைச் சுட்டிக்காட்டி, அபத்தமாக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன. போதைப் பொருள் தடுப்பு மற்றும் மதுவிலக்கு விவாதங்களின்போது, பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கும் ஆதவ் அர்ஜுனா பதில் அளிக்கிறார். அவரது ஆதாரமற்ற தனிநபர் விமர்சனமும் கத்தரிக்கப்பட்டது.

‘கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சிறப்பான திட்டங்களை மறைத்து, அரசியல் காழ்ப்புணர்வுடன் திரும்பத் திரும்ப சட்டப்பேரவையில், உண்மைக்கு மாறான தகவல்கள், அவதூறுகளை வீசுவதையே பண்பாக வைத்துள்ளனர்’ என சமூக வலைதளங்களில் பலரும் கருத்துகள் பகிர்ந்துவருகின்றனர். சினிமா வசனம் பேசியவர்கள், அதற்கு விசிலடித்தவர்கள், அதுபோலவே சட்டமன்றத்தில் செய்யலாம் என நினைக்கின்றனர். ஆனால், ‘சட்டமன்றம் வெற்று முழக்கங்களுக்கான மேடை அல்ல, மக்கள் பணிக்கான களம்’ என்பதைக் கழகத்தின் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தொடரில் ஆணித்தரமாகப் புரிய வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



ஜெ.சத்தியம்



### பவள விழா கண்காட்சியில் செல்பி!

2020-ஆம் ஆண்டில், ‘முரசொலி’ நாளிதழ் பவள விழா நிகழ்ச்சி, பிரம்மாண்டமாக நடைபெற்றது. அதையொட்டி, கோடம்பாக்கம் ‘முரசொலி’ வளாகத்தில் நடைபெற்றுவந்த பவள விழா கண்காட்சிக்கு, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் வடக்கு ஒன்றியம், ஆரணி பேரூர் கழக இளைஞர் அணி சார்பில் வந்து பார்வையிட்டோம். அப்போது, கழகத் தலைவர் அவர்களுடன் செல்ஃபி எடுத்த தருணம்.

**- ஜெ.சத்தியம், 8-வது வார்டு செயலாளர், ஆரணி பேரூர், சோழவரம் (வ) ஒன்றியம், திருவள்ளூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கட்டாயம் எதிர்ப்போம்!

1949-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் தேதி, ‘திராவிட நாட்டில் நாம் யாருக்கு எதிரி’ என்கிற கட்டுரை எழுதினார், பேரறிஞர் அண்ணா. “நாம் எந்தக் கட்சிக்கும் விரோதிகளல்லர், எந்த இனத்துக்கும் விரோதிகளல்லர் என்பதை இன்னும் வலியுறுத்திக் கூறுகிறோம். எந்தக் கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும், அந்தக் கட்சி செய்யும் காரியங்கள் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியனவாக இருக்கும்பட்சத்தில் அவற்றை நாம் எப்போதுமே வரவேற்றிருக்கிறோம் - வரவேற்போம். ஆனால், அதே கட்சி நாட்டுக்குத் தீங்கு பயக்கும் காரியங்களைச் செய்ய முயலுமானால், அவற்றை நாம் கட்டாயம் எதிர்த்தே தீருவோம்” என்று குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900